மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் எண்ணம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடம் கேட்ட வினா பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா என்பது. அதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஏழை எளிய மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி. அதனால் விவசாயிகளுக்கு இடு பொருள் கிடைப்பது சம்பந்தமாகவும் அவர்களுடைய மேம்பாட்டையும் கருதித்தான் அங்கே விவசாயப் பண்ணை அமைக்கும் திட்டம் உள்ளதா என்று நான் கேட்டேன். ஆகவே அது குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, அங்கு அமைக்கப்படாது என்பதற்குத்தான் இல்லை என்று பதில் சொன்னேன். தமிழ்நாட்டில் 44 அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெய்க்குப்பைப்புதூர், புதூர்ப் பாளையம், இனங்கூர் ஆகிய மூன்று இடங்களில் அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. நெய்க்குப்பைப்புதூரிலே 29.70 ஏக்கரும், புதூர்ப்பாளையத்திலே 60.80 ஏக்கரும், இனங்கூரில் 111.20 ஏக்கரும், மொத்தம் 201.70 ஏக்கர்கள் இந்தப் பண்ணைகளிலே இருக்கின்றன. லால்குடிக்குப் பக்கத்திலே 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்த நெய்க்குப்பைப்புதூர் பண்ணை பெரம்பலூருக்குப் பக்கத்திலே இருக்கிறது. ஆகவே புதியதாக ஒரு பண்ணையை ஏற்படுத்தத் தேவையில்லை.

பசுந்தாள் உர விதைகள்.

*11461. திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பசுந்தாள் உர விதைகள் வேளாண் கிடங்குகளில் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1991 சனவரி 22]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டு பசுந்தாள் உரப் பயிர் விதைகள் விவசாயிகளின் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, அவற்றைக் கொள்முதல் செய்து விநியோகித்திட புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு விதைப் பண்ணை மூலம் கொள்முதல் செய்யப்படும் பசுந்தாள் உரப் பயிர் விதைகள் அடுத்து வரும் ஆண்டிலிருந்து வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் விநியோகிக்கப்படும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அசோஸ்பைரில்லம் போன்ற பசுந்தாள் உரச் செடிகளை ஒவ்வொரு கிராமத்திலேயும் வேளாண்மைத் துறை பயிரிட்டு விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைப்பதற்கு, வழங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

10•10 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு வரை வேளாண்மை விரிவாக்கப் பணிகள் ஊராட்சி ஒன்றிய அளவிலே இருந்தபோது, இதுபோன்ற பசுந்தாள் விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தன. அத்துறை தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகு அந்தப் பணி இடைக்காலத்திலே மேற்கொள்ளப்படவில்லை. அதனுடைய அவசியத்தை உணர்ந்து இப்போது இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன் கொளிஞ்சி, செஸ்பேனியா சன்ஹெம்ப் போன்ற பசுந்தாள் பயிர் விதைகள் விவசாய விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. விதைப் பண்ணையில் விவசாயிகள் தரமான விதைகள் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு கொள்முதல் விலையுடன் விதைப் பண்ணை விவசாயிகளுக்குக் கூடுதலாக ஒரு கிலோ விதைக்கு ஒரு ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டில் 200 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்ய ரூ. 10 இலட்சமும், விதைப் பண்ணை விவசாயிகளுக்கு 200 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்வதற்காக ஊக்கத் தொகையாக ரூ. 2 இலட்சமும், மொத்தம் 12 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அசோஸ்பைரில்லம் ஒவ்வொரு கிராமங்களிலேயும் வேளாண்மைத்துறை மூலம் பயிரிட்டு வழங்குவதற்கு அரசு

[1991 சனவரி 22

முன்வருமா என்ற கேள்வியைக் கேட்டேன். அதற்குரிய விடையில், அமைச்சர் அவர்கள் படித்ததிலே காவாளை விடுபட்டிருக்கிறது. அதையும் சேர்த்து இரண்டுக்கும் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தனியாக அதைப்பற்றி எழுதித் தருவாரேயானால் பரிசீலிக்கலாம்.

வழுக்குப்பாறை திட்டம்.

*929.—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா :

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்தது. பல்வேறு சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்த்த பிறகு சாத்தியம் இல்லை என்று கைவிடப்பட்டது.

திரு. வே. பெரியசாமி : துணைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை மணியாச்சி திட்டம் என்று நீண்ட காலத்திற்கு முன்னாலே, காங்கிரஸ்காரர் காலத்திலேயிருந்து இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று அரசிடம் கோரிக்கை வைத்தார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக, சங்கராபாளையம், வெள்ளித்திருப்பூர், மாத்தூர், எண்ணமங்கலம், கண்ணப்பள்ளி, இலுப்பள்ளி, அம்மாபேட்டை, நெருஞ்சிப்பேட்டை போன்ற பகுதிகளில் மழைக் காலங்களில் அங்கே மழையே இல்லாத நிலையில் மிகவும் வறட்சி ஏற்பட்டு, ஏறத்தாழ 10 ஆண்டுகளாக மக்கள் அல்லல்பட்டுக் கொண்டு, குடிதண்ணீருக்குக்கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறவர்கள் பயனடைவார்கள். எல்லாப்பகுதிகளிலேயும் இதேபோன்ற திட்டத்தினைச் செய்திருக்கிறார்கள். ஆனால் பெரியார் மாவட்டத்திலே அந்தியூர் தொகுதியில் மட்டும் இத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதினால் 3,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.